கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.98/2022 வா.சா.1கலைச்செல்வி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 14.08.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

5) வா.சா.ஆ.7 புகாரை யார் சொல்லி தயார் செய்தார்கள் என்றால் நானும் என் கணவரும் தயார் செய்தோம். வா.சா.ஆ.7 புகார் வாசகங்கள் சரியானவையா என்றால் சரியானவைதான். என் புகாரில் 24.07.2020 தேதியன்று காலை 9.30 மணியளவில் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடைபெற்றபோது என்னைத் தவிர எனக்கு வேண்டியவர்கள் யாரும் அங்கு இல்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தை நானோ என் கணவரோ அலைபேசி மூலம் வீடியோ எடுக்கவில்லை என்றால் போட்டோ மட்டும் எடுத்தோம். அந்த புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறாக மேற்படி சம்பவம் தொடர்பாக நான் எந்த புகைப்படத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவத்திற்குப்பின் நான் உடனடியாக காவல் துறை அவசர உதவியை அழைக்கவோ காவல் நிலையம் நேரில் செல்லவோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 புகாரில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் கொலை முயற்சி முதலிய கடுங்குற்றங்களை குற்றஞ்சாட்டிதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 புகாரில் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் 24.07.2020 அன்று மட்டும் நடந்தவையா அல்லது பல்வேறு தேதிகளில் நடந்தவையா என்றால் பல்வேறு தேதிகளில் நடந்தவை ஆகும்.

6) வா.சா.ஆ.7 புகாரிலோ என் வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ மேற்சொன்னவாறு பல்வேறு தேதிகளை தனித்தனியே குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்சொன்னவாறு தேதிகளை தனித்தனியே குறிப்பிடவில்லை என்றும் ஆனால் தற்போது பின்யோசனையிட்டு வழக்கிற்காக குறிப்பிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7 புகாரில் அடியாட்கள் என நான் குறிப்பிட்ட நபர்கள் வாய்க்காலை சீரமைக்க வந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி வேலையாட்கள் யார் யாரென தெரிந்து அவர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக வேலையாட்கள் என்றே குறிப்பிட்டுள்ளேன். வா.சா.ஆ.7 புகாரில் கண்டவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் வாய்க்கால் சீரமைப்பை தடுக்கவே அவ்வாறு புகார் அளித்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் நான் உடனடியாக புகார் அளித்திருப்பேன் என்றும் போலீஸாரும் குற்றச்சாட்டின் கடுமையைக் கருதி உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7 புகாரின் பேரில் போலீஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் பிரதிவாதி இதற்குமேல் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டேன் என எழுதிக் கொடுத்ததால் புகாரை முடித்து விட்டார்கள். நான் அப்புகாரின்மீது மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி போலீஸாரிடம் எழுதிக் கொடுத்ததாக சொல்லும் கடிதத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7) வா.சா.ஆ.8 புகார் சம்பவத்தின் போது நாங்கள் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நானும் என் கணவரும் பைக்கில் சென்றோம். அச்சமயம் பிரதிவாதி பொள்ளாச்சி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.25/2021 தாக்கல் செய்து அதில்

அழைப்பாணை பெற்று நான் வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 புகாரில் டிராக்டர் நிறுத்தி வைத்ததாக சொல்லும் இடத்திலிருந்து என் சொத்து எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் சுமார் 100 மீட்டர் இருக்கும். வா.சா.ஆ.8 புகாரில் அங்கு டிராக்டர் நிறுத்தி பிரதிவாதியின் ஆட்கள் அதில் பனை மட்டைகளை ஏற்றிக் கொண்டிருந்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பனை மட்டைகளை கட்டாமல் வாகனத்தை நகர்த்தினால் அது சரிய வாய்ப்புள்ளது என்றால் அதுபற்றி தெரியவில்லை. வாகனத்தை நகர்த்த இயலாத காரணத்தால்தான் என்னை பைக்கை விட்டு இறங்கி நடந்து செல்லுமாறு பிரதிவாதி கூறினார் என்றும் ஆனால் நான் அதனை ஒரு வாய்ப்பாக பயன்படுத்தி புகார் அளித்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. டிராக்டர் நின்ற இடத்திலிருந்து என் பூமி நடந்து செல்லும் துாரம் தான் என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.25/2021 வழக்கை திரும்பப் பெற வைக்கவே வா.சா.ஆ.8 புகாரை அளித்தேன் என்றால் சரியல்ல.

8) இவ்வழக்குரையில் அ.வ.எண்.25/2021 வழக்கு நிலுவையில் இருப்பதை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தடத்தில் சொட்டுநீர் பாசனம் மூலம் தண்ணீர் திறந்துவிட்டதாக சொல்வதற்கு ஆதாரம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகைப்படங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவைதான் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்துள்ளேனா என்றால் சரிதான். வா.சா.ஆ.10 புகைப்படங்கள் வழக்கு ஆ அட்டவணைச் சொத்தில் எடுக்கப்பட்டவை என்பதற்கு ஆதாரம் இல்லை என்றால் சரியல்ல. புகைப்படத்தில் பிரதிவாதியின் கேட் தெரிகிறது. பிரதிவாதியின் கேட் தெரியும் புகைப்படத்தில் தண்ணீர் தேங்கி இருப்பதாக தெரியவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் கேட் தெரியும் புகைப்படத்தைத்

தவிர மற்ற புகைப்படங்கள் வழக்கு ஆ அட்டவணைச் சொத்தில் எடுக்கப்பட்டவை அல்ல என்றால் சரியல்ல.

9) வா.சா.ஆ.7 புகாரில் பிரதிவாதி என் பூமியிலுள்ள தண்ணீர் மடைக்கு சென்று வருவது வழக்கம் என குறிப்பிட்டிருந்தேன் என்றால் சரிதான். அந்த மடையானது ஆற்றிலிருந்து குளப்பத்துக்குளத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் அய்யர்மடை என்றால் சரிதான். அந்த அய்யர்மடையிலிருந்து பிரதிவாதி பூமிக்கு தண்ணீர் பாசனம் செய்யக்கூடிய நிலவாய்க்கால் பாத்தியத்தை மாண்புமிகு பொள்ளாச்சி சார்பு நீதிமன்றத்தின் அ.வ.எண்.126/2013 மக்கள் நீதிமன்ற தீர்ப்பாணையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10) வழக்கு அ அட்டவணைச் சொத்தில் எனக்கு ஒரு கிணறு பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். அந்த கிணறில் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். அந்த கிணறில் உரிமை இல்லாததால்தான் அய்யர்மடையிலிருந்து நீர்ப்பாசனம் செய்துகொள்ள மேற்படி தீர்ப்பாணையில் உரிமை வழங்கப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி பூமியில் இரண்டு கிணறுகள் உள்ளன. அ.வ.எண்.126/2013 மக்கள் நீதிமன்ற தீர்ப்பாணையின்போது எனக்கு திருமணம் நடந்திருந்ததா என்றால் திருமணம் நடந்திருந்தது. அவ்வாறெனில் அ.வ.எண்.126/2013 மக்கள் நீதிமன்ற தீர்ப்பாணை எழுதப்படும்போதே அதன் ஷரத்துகள் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பாணை எழுதப்படும் சமயத்தில் பிரதிவாதி பூமியில் கிணறுகள் இல்லை என்றால் சரியல்ல. இரண்டு கிணறுகள் இருந்தன. மேற்படி இரண்டு கிணறுகளையும் குறிப்பிட்டுதான் அ.வ.எண்.126/2013 மக்கள் நீதிமன்ற தீர்ப்பாணை எழுதப்பட்டது என்றால் சரிதான். அ.வ.எண்.126/2013 மக்கள் நீதிமன்ற தீர்ப்பாணையின்படி நடந்து கொள்ள வேண்டிய கடமை வாதிக்கும் பிரதிவாதிக்கும் உண்டு என்றால் சரிதான். அ.வ.எண்.126/2013 மக்கள் நீதிமன்ற தீர்ப்பாணையில் பிரதிவாதிக்கு

வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மறுக்க எனக்கோ என் கணவருக்கோ அதிகாரம் இல்லை என்றால் சரிதான்.

11) அ.வ.எண்.126/2013 மக்கள் நீதிமன்ற தீர்ப்பாணையில் பொது ஷரா 6ல் என் பூமி வழியே பிரதிவாதி பூமிக்கு மண் வாய்க்கால் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். அந்த மண் வாய்க்காலில் விழும் மண்ணை நானே 20 நாட்களுக்கு ஒருமுறை துார் வார வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நான் துார் வார தவறும்பட்சத்தில் பிரதிவாதியே JCB இயந்திரம் கொண்டு துார் வாரிக்கொள்ள உரிமை உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு JCB இயந்திரம் வந்து செல்வதற்கு ஏதுவாகத்தான் என் பூமியில் 52 அடி அகலத்திற்கு தென்னந்தோப்பு தவிர இடையே ஊடுபயிர் செய்யக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆனால் தற்போது அந்த 52 அடி அகலத்தில் வாகனம் ஏதும் செல்ல இயலாதவாறு தென்னந்தோப்பு அடர்த்தியாக உள்ளது என்றால் மேற்படி 52 அடியில் 40 வருட தென்னைமரம் இருந்ததால் அதனை ஈடுசெய்ய அதே 52 அடியில் தோராயமாக 25 முதல் 30 தென்னை கன்றுகள் வைத்துள்ளேன். மேற்படி தென்னங்கன்றுகள் எப்போது வைத்தேன் என்றால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புதான் வைத்தேன். நான் சொன்னதுபோல் 40 வருட தென்னை மரத்தை ஈடுசெய்ய நான் தென்னங்கன்றுகளை வைக்கவில்லை என்றும் பிரதிவாதி தன் வாய்க்காலுக்கு செல்லும் பாதையை மறிக்கவே சீரின்றி தென்னங்கன்றுகளை அங்கு வைத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதி அவ்வாறு வாய்க்காலை பராமரிக்க முடியாமல் செய்ததால்தான் பிரதிவாதி நீர்ப்பாசனம் செய்ய இயலாமல் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் மேற்படி வாய்க்கால் பூமியிலிருந்து 22 அடி தாழ்வில் அமைந்துள்ளது. மேற்படி வாய்க்காலில் பிரதிவாதி JCB இயந்திரம் கொண்டு அளவுக்கதிகமாக ஆழமாகத் தோண்டியதால் மண்

மேற்கொண்டும் சரிந்ததால் அவரது JCB இயந்திரம் கூட அங்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

12) நான் மேற்சொன்னவாறு JCB இயந்திரம் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டதால்தான் பிரதிவாதி ஆட்களைக் கொண்டு வாய்க்காலை துார் வார முயற்சித்தார் என்றால் சரிதான். அவ்வாறு பிரதிவாதி துார் வார முற்பட்டபோது பிரதிவாதியையும் அவரது ஆட்களையும் வேலை செய்ய விடாமல் நானும் என் கணவரும் வாய்க்காலில் இறங்கி பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல.

13) அ.வ.எண்.25/2021 வழக்கை பிரதிவாதி திரும்பப் பெற வைக்கவே நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.25/2021 வழக்கை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்று பிரதிவாதி வாய்க்காலை பராமரிக்க வருவதை தடுக்கவே முயன்றுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் பெறப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளையானது அ.வ.எண்.126/2013 மக்கள் நீதிமன்ற தீர்ப்பாணையில் பிரதிவாதிக்கு வழங்கப்பட்ட 52 அடி பாதை உரிமையை எவ்விதத்திலும் பாதிக்காது என்றால் சரிதான். அ.வ.எண்.126/2013 மக்கள் நீதிமன்ற தீர்ப்பாணையில் எனக்கும் எனது கணவருக்கும் வழங்கப்பட்ட வண்டித்தட பாத்தியத்தை பிரதிவாதி ஒருபோதும் தடுத்ததில்லை என்றால் சரியல்ல. பொய்யான வழக்குமூலம் கண்டு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் எதிர்கோரிக்கை முறையானது அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**ஒப்பம் /- ( M.S.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி